**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 22/2016**

**Deposition of Witnesses for PW6**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.காளீஸ்வரன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 04.08.2025

**1வது எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2வது எதிரி ஆஜர். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

முதல் விசாரணை

நான் தற்போது எஸ்.பி.பட்டிணத்தில் குடியிருந்து வருகிறேன். முன்பு கிராம உதவியாளராக பணிபுரிந்து தற்போது இடைக்கால பணி நீக்கத்தில் உள்ளேன். முன்பு கிராம உதவியாளராக 16.10.2015ம் தேதி மருங்கூர் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வந்தபோது, கிராம நிர்வாக அலுவலர் சிதம்பரம் அவர்களுடன் திருவாடனை வட்டாட்சிரியர் அலுவலகத்தில் இருந்தபோது விஏஓ இராமநாதபுரம் NIB-CID அலுவலகத்திற்கு வர சொன்னார். நான் அங்கு சென்றேன். அங்கு நான் சென்றபோது என்னிடம் மருங்கூர் கிராம நிர்வாக அலுவலர் சிதம்பரம் எனக்கு முன்பாக அங்கு இருந்தார். நான் அவரை சந்தித்தேன். நான் அவரை சந்தித்தபோது அவர் என்னிடம் NIB-CID அலுவலகத்திற்குள் வைத்து சில ஆவணங்களில் கையெழுத்து போட சொன்னார். நான் கிராம நிர்வாக அலுவலரின் சொல்படி NIB-CID அலுவலகத்தில் அவர்கள் கையெழுத்து போட சொன்னபடி கையெழுத்து போட்டு கொடுத்தேன். நான் கையெழுத்து போட்டுக்கொடுத்த பேப்பர்கள் என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.2 சோதனை சம்மத கடிதத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம்

என்னுடையது தான். அந்த 2வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.த.சா.ஆ.3 அத்தாட்சியில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த 2வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அல்லா பிச்சையின் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த 2வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. களந்தர் அலியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த 2வது சாட்சி கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய கோரியதற்கு அனுமதி வழங்கப்பட்டது).**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

கடந்த 16.10.2015ம் தேதி எஸ்.பி.பட்டிணம் டு மீமிசல் செல்லும் கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள நாகூர் கனி என்பவருக்கு சொந்தமான வீட்டில் கஞ்சா பதுக்கி வைத்திருப்பதாகவும் அதற்கு சோதனை செய்ய சாட்சியாக இருக்க NIB-CID ராமநாதபுரம் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் கிராம நிர்வாக அலுவலருடன் அவர்களுடன் நானும் புறப்பட்டு சம்பவ இடம் 22.00 மணிக்கு சென்று களந்தர் அலியின் தென்னதோப்பில் தகவலாளி அடையாளம் காட்டிய அப்துல் காதர் மகன் அல்லா பிச்சை மற்றும் நாகூர் கனி மகன் களந்தர் அலி ஆகியோருடன் சம்மத கடிதம் பெற்று, ஆய்வாளர் சோதனை செய்தார் என்றும் சம்மத கடிதத்தில் நானும், கிராம நிர்வாக அலுவலரும் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும் எங்கள் முன்னிலையில் சோதனை செய்தபோது 3 சாக்கு மூட்டைகளில் ஆய்வாளர் கஞ்சாவை கைப்பற்றினார் என்றும் அதற்கு P1 to P3 வரை ஆய்வாளர் குறியீடு செய்தார் என்றும், அந்த மூட்டைகளை எடை போட்டு பார்த்தபோது P1-45 kg, P2-45 Kg, P3-44 Kg மொத்தம் 144 கிலோ கஞ்சா இருந்தது என்றும் மேற்படி மூட்டைகளிலிருந்து பகுப்பாய்விற்காக 50 கிராம் வீதம் எடுக்கப்பட்டு S1 to S3 வரை ஆய்வாளர் குறியீடு செய்தார் என்றும், 1வது எதிரி அல்லா பிச்சை என்பவர் ஆஜர் செய்த 2 நோக்கியா செல்போன்னுடன் கூடிய சிம்கார்டு, 2வது எதிரி களந்தர் அலி ஆஜர் செய்த சோனி செல்போன்-1,

நோக்கியா செல்போன்னுடன் கூடிய சிம்கார்டு, பணம் ரூ.6300/- ஆகியவற்றை ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்தார் என்றும், அதில் நானும், விஏஓ, Q பிரிவு ஆய்வாளர் மற்றும் உதவிஆய்வாளர் ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்றும், 1வது எதிரி அல்லா பிச்சையும், 2வது எதிரி களந்தர் அலியும் சம்பவ இடத்தில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், விஏஓ ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்து செய்தோம் என்று ஆய்வாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிகளுக்கு சாதகமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் கையெழுத்து செய்து கொடுத்த ஆவணங்களில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது அங்கு தயாரித்து வைத்திருந்த ஆவணங்களில் தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை:-**

இல்லை

Taken down by me in open court
read over to the witness and
admitted by him to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.